# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2024 NOVEMBER No. 11


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### நீதிமொழிகள் 26:1-10

1. உஷ்ணகாலத்திலே உறைந்த பனியும், அறுப்புக்காலத்திலே மழையும் தகாதது போல, மூடனுக்கு மகிமை தகாது.
2. அடைக்கலான் குருவி அலைந்து போவதுபோலும், தகைவிலான் குருவி பறந்து போவதுபோலும், காரண மில்லாமலிட்ட சாபம் தங்காது.
3. குதிரைக்குச் சவுக்கும், கழுதைக்குக் கடிவாளமும், மூடனுடைய முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது.
4. மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடாதே; கொடுத்தால் நீயும் அவனைப் போலாவாய்.
5. மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு; கொடாவிட்டால் அவன் தன் பார்வைக்கு ஞானியா யிருப்பான்.
6. மூடன் கையிலே செய்தி அனுப்பு கிறவன் தன் கால்களையே தறித்துக் கொண்டு நஷ்டத்தை அடைகிறான்.
7. நொண்டியின் கால்கள் குந்திக்குந்தி நடக்கும், அப்படியே மூடரின் வாயிலுள்ள உவமைச்சொல்லும் குந்தும்.
8. மூடனுக்குக் கனத்தைக் கொடுக்கிற வன் கவணிலே கல்லைக் கட்டுகிற வன்போலிருப்பான்.
9. மூடன் வாயில் அகப்பட்ட பழமொழி வெறியன் கையில் அகப்பட்ட முள்ளு.
10. பெலத்தவன் அனைவரையும் நோகப் பண்ணி, மூடனையும் வேலை கொள்ளு கிறான், மீறி நடக்கிறவர்களையும் வேலைகொள்ளுகிறான்.

## ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பீர்களாக!

(கலாத்தியர் 6:2)


Rev. ஏஞ்சலின் செல்வகுமாரி,
Hon. Editor-in-Chief




நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்! அவருடைய அன்பு எல்லையற்றதும், நிபந்தனையற்றதும், மறுக்க முடியாததுமாக உள்ளது. இந்த ஆண்டின் கடந்த பத்து மாதங்களும் நம்மைப் பாதுகாத்த அவருடைய கிருபை, தயவுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவருடைய பிள்ளைகளாகிய நம்மை தேவ கிருபை தொடர்ந்து நடத்த போதுமானது.

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என வேதம் கூறுகிறது. ஆனால் நமது வாழ்க்கை அதற்குத் தகுதியானதா என்பதுதான் கேள்வியாகும். **நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 4: 1)** என்றார். பவுல் அப்போஸ்தலன்; இதற்கு என்ன பொருள்? நீண்ட நாட்களாக இச்சொற்றொடர் எனது மனதில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. "அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடந்துகொள்ளுங்கள்" என்பதின் உண்மைப் பொருள் யாது? நாம் என்ன செய்ய அழைக்கப்பட்டுள்ளோம். இதில் பல அம்சங்கள் காணப்பட்டாலும், ஒன்றைக் கவனிப்போம்.

### சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகள்!

**"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படு வார்கள்"** (மத்தேயு 5: 9). அன்புள்ள சகோதர சகோதரிகளே, நாம் தேவனுடைய பிள்ளைகளென்று, அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாக நடக்க


தொடர்ச்சி 3-ம் பக்கம்.....



அழைப்பின் எதிரொலி!



## கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.

**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**HON. MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.

**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858
95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

**YOUTUBE CHANNEL**
Echo of His Call

"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ
ஒரு நன்மையுங் குறைவுபடாது. ."

- சங்கீதம் 34 : 10

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான தேவப் பிள்ளைகளே,

தேவனுடைய ஆலயத்திலிருந்து உங்களை வாழ்த்துகிறோம். உங்கள் நல்வாழ்வு மேலும் மேலும் துளிர்க்கும்படி ஜெபிக்கிறோம். (சங்கீதம் 118 : 26)

**அழைப்பின் எதிரொலி** ஊழியங்கள் அனைத்தையும் செவ்வனே செய்ய தேவன் நல்கியிருக்கும் தரமான உடன் ஊழியர்களுக்காக தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு நன்றியுடையவர்களாயிருக்கிறோம். நம் ஊழியங்களுக்கு தடைகளும், வியாதிகளும், பொருளாதாரக் குறைவுகளும் பாதகமாக இருந்தாலும், அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னபடி, **கப்பற்சேதமேயன்றி உயிர்ச்சேதம் ஏற்படாதபடி** (அப்போஸ்தலர் 27: 22) இயேசு ஆண்டவர் நம்மை காத்து வழி நடத்தி வருகிறார்.

நம் திட்டப்படி சில உள்ளூர்ப் பிரயாணங்களை மேற்கொள்ள வொட்டாதபடி நமது ஊழியர்களின் பெலவீனங்கள் காரணமாய் அமைந்துவிட்டன. எனினும் **"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் தேவன் அவனை தூக்கி நிறுத்துவார்"** (நீதிமொழிகள் 24:16) என்ற தேவ வார்த்தைகளின்படி தேவன் நம்மைத் தூக்கி நிறுத்தியிருக்கிறார். எனவே இந்த நவம்பர் மாதம் நமக்கு சிறப்பாய் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

நம்முடைய **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை முன்னணியில் நின்று நடத்தும் நம் உடன் ஊழியர்களான, Dr. **செரீனா பெவின்**, சகோதரி **சாஜினி செரியன்,** Rev.Dr. K.R. **இராஜசேகரன்,** Rev.Dr. **வில்லியம் ராபர்ட்** ஆகியோர்களுக்காகவும், 16 மொழி ஆசிரியர்களுக்காகவும், மொழி ஆசிரியர்களின் உதவியாளர்களுக்காகவும், உறுதுணை யாளர்களுக்காகவும், அச்சகப் பணியாளர்களுக்காவும், அலுவலக பணியாளர்களுக்காவும், பங்காளர்களுக்காகவும் தயவு செய்து ஜெபியுங்கள். இவர்கள் ஆவியிலும், சரீரத்திலும் நலமுடன் இருந்தால்தான் நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஒவ்வொரு மாதமும் ஒழுங்காக வெளிவரும்.

நமது சபைகள், **நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**, அச்சகம், **அழைப்பின் எதிரொலியின்** ஊடக ஊழியங்கள் (You Tube), களப்பணி மையங்கள் மற்றும் அலுவலகம் போன்ற எல்லா ஊழியங்களிலும் செயல்படும் அனைத்து தேவ மக்களையும் நினைத்து அவர்களுக்காக ஜெபிக்கத் தவறாதீர்கள்.

பொருளாதார விஷயத்தில் நம் ஊழியம் வெகுவாய் தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், எங்களால் பொருளாதாரத் தேவைகளைச் சமாளிக்க முடியவில்லை என்பதையும் எங்கள் உடன் ஊழியர்களாகிய நீங்கள் அறிவீர்களாக.

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

(+91) 98410 71858 / 98412 71858, மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

## உங்கள் கவனத்திற்கு!

*நமது அழைப்பின் எதிரொலி ஊழியத்தின் 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் Echo of His Call YouTube சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட (Personal) இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

வேண்டுமெனில், நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும்; இதுதான் தேவ பிள்ளைகளின் முக்கியமான குணநலனாகும்; கலகம் பண்ணுகிறவர்களாக அல்ல, சமாதானம் பண்ணுகிறவர்களாகவே தேவன் நம்மை அழைத்துள்ளார்.

தேவனுடைய பிள்ளைகளே, நாம் ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமப்பதன் மூலம் சமாதானம் பண்ணுகிறவர்களாக அழைக்கப்பட்டுள்ளோம் என்று **(எபேசியர் 4: 2)** போதிக்கிறது; இதைச் செய்வதற்கு நாம் தாழ்மையுடனும், மிருதுவாகவும், பொறுமையுடனும் இருக்க வேண்டும். நமது சக விசுவாசிகளோடு மாத்திரமல்ல, தங்களது கடுமையான வார்த்தைகளாலும், நம்மைப் புண்படுத்தும் செயல்களால் நமது பொறுமையைச் சோதிப்பவர்களிடமும் நாம் இவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்; இந்த குணநலனைத்தான் தேவ பிள்ளைகளிடமிருந்து வேதம் எதிர்பார்க்கிறது. நாம் வசனத்தைக் கேட்கிறவர்களாக மட்டுமல்ல அதன்படி செய்கிறவர்களாகவும் இருக்க வேண்டுமென்று யாக்கோபு கூறியுள்ளார்.

### ஒருவர் பாரத்தை ஒருவர் சுமத்தல்!

**கொலோசெயர் 3: 13** சொல்லுகிறது: **ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

ஒருவர் பாரத்தையொருவர் சுமப்பதில் மன்னிப்பு அவசியமாகிறது. உண்மையாக மன்னிக்க, நமக்கு தேவ அன்பு அவசியம்; இல்லையெனில் நாம் மன்னிக்கவோ மறக்கவோ இயலாது. நானும் உணர்வுகள் கொண்ட மனிதனா கையால் என்னால் அதைச் செய்வது கடினம்; அது முடியாது என்று நீங்கள் கூறலாம். இங்குதான் நேசிக்கவும் மன்னிக்கவும் நமக்கு தேவனுடைய ஒத்தாசை தேவைப்படுகிறது. ஒருவரது பாரத்தை பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பது வெறுமனே ஒரு ஆலோசனையல்ல; அது ஒரு கட்டளையாகும்! **(கலாத்தியர் 6: 2)** "... **ஒருவர் பாரத்தையொருவர் சுமந்து, இப்படியே இயேசு கிறிஸ்து பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்.**

கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்ற, நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் கஷ்டங்களும், சவால்களும், மிதமிஞ்சிய சூழ்நிலைகளும், பொருளாதார போராட்டங்களும், பாவத்துடன் போராட்டங்களும், சரீரத்திலும், ஆத்துமாவில் சோதனைகளும் உள்ளன; ஆனால் நாம் மட்டும் இந்த வகையான பாரங்களைச் சுமப்பதற்கு அல்ல, அதற்காகத்தான், தேவன் சபைக் குடும்பத்தைக் கொடுத்துள்ளார். நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயுள்ளபடியால், ஒரு உறுப்பு துன்பப்பட்டால் சரீரம் முழுவதும் துன்பப்படுகிறது.

### சிலுவையின் அடையாளம்!

தேவனோடு நமக்குள்ள உறவை வலியுறுத்தி, நாம் அவரோடு சமாதானத்தைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறோம். எனினும் சிலுவையின் அடையாளம் இரண்டு கோடுகளில் அடங்கியிருக்கிறது! தேவனோடுள்ள நமது உறவைக் குறிக்கும் நேர்தளக்கோடும், மனிதர்களுடன் உள்ள நமது உறவைக் குறிக்கும் சமதளக் கோடுமாகும்.

இயேசுவானவரின் இரு முக்கியக் கற்பனைகளும் அவ்வாறே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது: முதலாவது, **உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்பு கூறுவாயாக மத்தேயு 22: 37,** (என்பது தேவனோடு நமக்குள்ள நேர்தள உறவையும்) இரண்டாவது ... "**உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோலப் பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக** (என்பது நமக்கு மனிதரோடுள்ள சமதளக் கோட்டினையும் குறிப்பிடுகிறது. **மத்தேயு 22: 39.**

தேவனோடுள்ள உறவுடன் நம்மில் பலரும் திருப்தியடைந்து விடுகிறோம். நாம் தேவனிடம் அன்பு கூர்ந்து, வேதத்தை வாசித்து, ஜெபித்து, உபவாசித்து, ஆலயத்திற்குச் சென்று, ஊழியத்தில் ஈடுபட்டு, பவுல் எழுதியுள்ளதுபோல், **எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவியினைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் அளிக்கப்பட்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 12: 8–10** என்பதுடன் திருப்தியடைந்து விடுகிறோம்.

ஆனால் ஆவியின் கனியைக் குறித்து என்ன? "**ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், சாந்தம், இச்சையடக்கம்... கலாத்தியர் 5: 22, 23** பலர் தங்களுடைய ஊழியத்தையும், தேவனோடுள்ள உறவிலும் கவனம் செலுத்திவிட்டு, தங்கள் குடும்பங்களையும், பிறரையும் மறந்து விடுகின்றனர். ஆனால் இரண்டுமே சரிசமமாக முக்கியமானவை என்று வேதம் போதிக்கிறது.

### சபையின் பொறுப்பு!


உங்களையும், என்னையும் உள்ளடக்கிய சபையானது சக விசுவாசிகளின் பாரத்தை விசாரிப்பதிலும், சுமப்பதிலும் முக்கியப் பொறுப்பு வகிக்கிறது. சரீரத்தின் ஒரு உறுப்பு துன்பப்படும்போது, அது முழு சரீரத்தையும் பாதிக்கிறது. வெறுமனே மனதுருக்கம் மாத்திரம், மற்றவர்களை விசாரிப்பதல்ல; அதில் நமது தனிப்பட்ட கரிசனையும் காணப்பட வேண்டும். நம்மைச் சுற்றியுள்ளவர்கள் ஆரோக்கிமாயிருக்கையில், நாமும் ஆரோக்கியமாயிருந்து, பயனடைகிறோம். மாறாக, நாம் துன்புறும்போது, நமக்கு நெருங்கினவர்களும், நமது சபையைச் சேர்ந்தவர்களும் பாதிப்படைகின்றனர்.

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள் கலாத்தியர் 6: 2** என்பது தெளிவான கட்டளையாகும்; இது நமக்கு விருப்பமான தெரிந்துகொள்ளுதல் அல்ல; தேவனுடைய குடும்பத்திற்கு ஒரு நேரடியான கட்டளையாகும். அவ்வாறு செய்வதின் மூலமாகத்தான் தேவனுடைய பிள்ளைகளாக நமக்கு அளிக்கப்பட்டுள்ள அழைப்பின்படி

வாழ இயலும். ஒருவர் பாரத்தை மற்றவர் சுமந்தவர்களின் உதாரணத்தை வேதத்திலிருந்து காண்போம்.

## தாவீதும், யோனத்தானும்!

சுயநலமற்ற அன்புக்கும், நட்புக்கும் சிறந்த உதாரணமாகத் திகழ்வது தாவீது, யோனத்தானுக்கிடையே இருந்த பிணைப்பாகும். வருங்காலத்தில் தாவீது, தனது இடத்தில் அரசனாக வருவான் என்பதை அறிந்தும், யோனத்தான் தாவீதை முழுமனதுடன் நேசித்தான். தனது தந்தையாகிய சவுல் அரசனுக்கு எதிர்த்து நிற்குமளவிற்கு யோனத்தான், தாவீதுக்கு உண்மையான நண்பனாயிருந்தான்.



சீப் வனாந்திரத்தில் ஒளித்திருந்த தாவீதைக் கொல்லும்படி சவுல் அவனை விடாமல் துரத்தினான்; ... ஆனால் கர்த்தர் தாவீதை அவன் கைகளில் ஒப்புக் கொடுக்கவில்லை **(1 சாமுவேல் 23: 14).** கர்த்தர் தாவீதை பாதுகாத்தார்.

அன்புள்ள நண்பர்களே, தேவன் தாவீதை இவ்விதமாய் பாதுகாத்தாரென்றால், நமது வீழ்ச்சியைக் காண விரும்பும் எதிரிகளிடமிருந்து அவர் நம்மையும் பாதுகாப்பார் என்பது என்னே ஆறுதலான உண்மை! சிலவேளை நாம் தொடர் தாக்குதலுக்குள்ளாவதாக உணரலாம். ஆனால் கர்த்தர் நம்மைச் சத்துருக்களின் கரங்களில் ஒப்புக்கொடுக்க மாட்டார். நமது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாக இருந்தால், நமது சத்துருக்களும் நமது நன்மைக்காக செயல்படுவார்கள். சத்துரு நம்மை நெருங்கிக் காணப்பட்டாலும், தனது கட்டுப்பாட்டில் அவனை வைத்துள்ள தேவன், நாம் அவனது கரங்களில் விழ அனுமதியார்.

சவுல் தன்னை வேட்டையாடுவதை யறிந்து; தாவீது பயந்திருந்தான். அப்பொழுது அவன் தனிமையானவனாகவும், நம்பிக்கை யற்றவனாகவும், கவலையுற்றவனாகவும், தனது குடும்பம், நண்பர்கள், தனது வீட்டின் வசதிகளையெல்லாம் விட்டு வனாந்திரத்தில் ஒளிந்துகொண்டிருந்தான். பாதகச் சிந்தனைகள் நம்மில் வேரூன்றித் தழைக்குமளவுக்கு தனிமை ஓர் வலிமையான எதிரியாகும். ஆனாலும் இதுபோன்ற தனது இருளான சமயங்களிலும் தாவீதோடிருந்த தேவன் நம்மோடும் இருக்கிறார்.

தாவீது சரீரத்திலும், சிந்தையிலும், ஆத்துமாவிலும் சோர்ந்திருந்தபோது, சற்றும் எதிர்பாராத ஒருவர் அவனைச் சந்தித்தார். "...சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்தில் போய் தேவனுக்குள் அவன் கையை திடப்படுத்தினான்" **(1 சாமுவேல் 23: 16).** வேறு சில மொழிபெயர்ப்புகளில் இவ்வசனம் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது!

தேவனுக்குள் பெலனடைய உதவினான்.

தேவனுக்குள் அவனது விசுவாசத்தில் உறுதிப்பட உதவினான்.

அவன் கையை திடப்படுத்தினான்.

தேவனுக்குள் அவனைத் திடப்படுத்தினான்.

சுருக்கமாக யோனத்தான், காட்டிற்குச் சென்று தனது நண்பனைச் சந்தித்து அவனது ஆவியை உற்சாகப் படுத்தினான். தாவீதின் பலவீனத்தில் உற்சாகமும், பெலனுமளிக்கும் வார்த்தையைப் பேசினான். உணர்வுப்பூர்வமாக மட்டுமல்ல தாவீதின் வறட்சியான சமயத்தில் தேவனுக்குள் தன் பெலனைக் கண்டடைய யோனத்தான் உதவினான். யோனத்தானின் வார்த்தைகள் தாவீதுக்கு ஆழமான "தாக்கத்தை ஏற்படுத்தின. **நீர் பயப்பட வேண்டாம்; என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்க மாட்டாது; நீர் இஸ்ரவேலின்மேல் ராஜாவாக இருப்பீர்; அப்பொழுது நான் உமக்கு இரண்டாவதாகயிருப்பேன்; அப்படி நடக்கும் என்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார் என்றான் 1 சாமுவேல் 23: 17.**

தாவீதின் வாழ்க்கைக்கான தேவ திட்டத்தை யோனத்தான் அவனுக்கு மீண்டும் உறுதிப்படுத்தினான். தன் சொந்தத் தகப்பனது தவறுகளை ஏற்றுக்கொள்ள யோனத்தானுக்கு எவ்வளவு சங்கடமாயிருந்திருக்கும் என சிந்தியுங்கள். ஒரு வலிமை மிக்க அரசனாயிருந்து எவ்வளவு கடினமாக முயன்றும் சவுலால் தேவ சித்தத்தை மாற்ற இயலவில்லை. ஆனால் தாவீதுதான் அடுத்த அரசன் என்று ஏற்றுக்கொண்ட யோனத்தான் அவனுக்கு கீழ் சேவை செய்ய விருப்பமுள்ளவனாயிருந்து, தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலை அடையாளம் கண்டு கொண்டான். தேவனுடைய திட்டங்களுக்கு எதிரான மனித திட்டமும், பாதாளத்தின் திட்டங்களும் ஒன்றும் செய்ய இயலாது. ஏனென்றால் அவர் நமக்கு, **சமாதானத் திற்கு ஏதுவான முடிவுகளைக் கொடுக்கும் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார் (எரேமியா 29: 11).**

யோனத்தான் தனது இயல்புக்கு மீறிச்சென்று தாவீதை உற்சாகப்படுத்தியது, நாமும் பிறரை உற்சாகப்படுத்தும்போது, அவர்கள் கர்த்தருக்குள் திடப்படுத்தப் படுகின்றனர் என்பதை உணர்த்துகிறது. நாம் நமக்குத்தான் ஆறுதலைத் தேடுகிறோம்; ஆனால் மற்றவர்களை உற்சாகப்படுத்த எப்போதாவது முயற்சி செய்துள்ளோமா? இன்றைய உலகில் பிறருடைய தேவைகளைப் பற்றிக் கரிசனையற்றிருப்பது மிகச்சுலபம்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி
சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை
Diploma in Theology
போதனா மொழி : தமிழ்
கல்வித்தகுதி : 10-ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.
தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 அக்டோபர் 19 முதல் நவம்பர் 18 வரை**

**(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)**

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

**நவம்பர் 19** ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** 2024–2025ம் வருட கல்வியாண்டின் முதலாவது பருவத்தை வெற்றிகரமாக நிறைவடையச் செய்த கிருபைக்காக...

**நவம்பர் 20** ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக...

**நவம்பர் 21** ⇨ நமது **அஞ்சல்வழி இறையியல் கல்வி** மற்றும் **வேதாகமக்கல்வி முறைகளின்** வளர்ச்சிகளுக்காக...

**நவம்பர் 22** ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனை மற்றும் ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத மக்களிடம் சுவிசேஷம் சென்றடைந்ததற்காக..

**நவம்பர் 23** ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

**நவம்பர் 24** ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளித்து வரும் இணை ஆசிரியர்களை கொண்ட நமது ஊழியத்தை ஆசீர்வதித்து வருகிறதற்காக...

**நவம்பர் 25** ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ...

**நவம்பர் 26** ⇨ நமது ஊழியங்களில் ஈடுபாட்டுடன் தொடர்ந்து ஆதரவளித்து வரும் ஆதரவாளர்களை ஆசீர்வதித்து வருவதற்காக ...

**நவம்பர் 27** ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் சிறுவர் ஞாயிறு பள்ளியில் அர்ப்பணிப்புடன் ஊழியம் செய்கிற ஆசிரியர்களுக்காக...

**நவம்பர் 28** ⇨ நமது மீடியா குழுவின் YouTube ஊழியங்களின் தலைவர் சகோதரர் எட்வர்டு துரை அவர்களுக்காக...

**நவம்பர் 29** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** யூடியூப் ஊடக ஊழியங்கள் மூலமாக சந்திக்கப்படாத பகுதிகளில் சுவிசேஷம் பரவச் செய்த கிருபைக்காக ...

**நவம்பர் 30** ⇨ நமது தலைமைச்சபை மற்றும் கிளைச் சபைகளில் நடத்தப்படும் சிறுவர் ஞாயிறு பள்ளி மூலமாக அதிக குழந்தைகளை ஆசீர்வதித்து வரும் கிருபைக்காக ...

**டிசம்பர் 01** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு தேவ பாதுகாப்பு அளித்து வரும் கிருபைக்காக...

**டிசம்பர் 02** ⇨ நமது நலன்விரும்பிகள், நண்பர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்காக...

**டிசம்பர் 03** ⇨ நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியர்களின் மேல் கர்த்தரின் வழிநடத்துதல் மற்றும் ஆசீர்வாதங்களுக்காகவும்...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

**டிசம்பர் 04** ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் கர்த்தர் அனைத்து தீய சக்திகளிலிருந்தும் தொடர்ந்து பாதுகாக்க...

**டிசம்பர் 05** ⇨ நமது தலைமைப் போதகரது சுயசரிதை எழுதும் செயல்பாடு நிறைவாய் நிகழ்ந்திட...

**டிசம்பர் 06** ⇨ உலகளாவிய அளவில் போதகர்களுக்கும் களப் பணியாளர்களுக்கும் தேவ பாதுகாப்பு அளிக்க வேண்டி...

**டிசம்பர் 07** ⇨ நமது பத்திரிக்கை குழும உறுப்பினர்களுக்காக...

**டிசம்பர் 08** ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரியின்** பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்காக...

**டிசம்பர் 09** ⇨ இளம் பருவத்தினரிடையே செயல்படுகின்ற தற்கொலையின் ஆவி நீக்கப்பட...

**டிசம்பர் 10** ⇨ புயல்கள், பூமியதிர்ச்சிகள் போன்ற இயற்கை சீற்றங்கள் உலகமெங்கும் தடுக்கப்பட வேண்டி...

**டிசம்பர் 11** ⇨ நமது திருச்சபை குழும உறுப்பினர்களுக்காக...

**டிசம்பர் 12** ⇨ நமது பள்ளி குழும உறுப்பினர்களுக்காக...

**டிசம்பர் 13** ⇨ உலகமெங்கும் புதிய தொற்றுகள் பரவாமல் தெய்வீக பாதுகாப்பு வேண்டி...

**டிசம்பர் 14** ⇨ உலகளாவிய அளவில் கிறிஸ்துவ ஊழியங்களில் எழுப்புதல் வரவேண்டி...

**டிசம்பர் 15** ⇨ யுத்தங்களாலும், தீவிரவாதங்களாலும் பாதிக்கப்பட்ட உலகநாடுகளில் சமாதானமும் மற்றும் அமைதியும் திரும்ப வேண்டி...

**டிசம்பர் 16** ⇨ நமது வேதாகமக் கல்லூரிகளின் குழும உறுப்பினர்களுக்காக...

**டிசம்பர் 17** ⇨ கள்ள போதனைகள் மற்றும் போலியான அற்புதங்களிலிருந்து விசுவாசிகளுக்கு தெய்வீக பாதுகாப்பு கிடைக்க வேண்டி....

**டிசம்பர் 18** ⇨ நமது மருத்துவ ஊழியத்தில் கர்த்தர் நடத்தி வரும் அற்புதங்களுக்காக...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

பண உதவி செய்தால் போதும் என்பது நமது எண்ணம்; அதுதேவைதான். ஆனால் சரீரப்பிரகாரமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் நாமே அவர்களுடனிருப்பது மிகவும் இன்றியமையாதது.

## பர்சிலா!

வயதெல்லாம் ஒரு எண்தான் என்பதை வெளிப்படுத்திய பர்சிலா என்ற மனிதனை நாம் வேதத்தில் காண்கிறோம். **பர்சிலா எண்பது வயது சென்ற கிழவனாயிருந்தான்; ராஜா மக்னாயிமிலே தங்கியிருக்கு மட்டும் அவனைப் பராமரித்து வந்தான்; அவன் மகா பெரிய மனுஷனாயிருந்தான் (2 சாமுவேல் 19: 32).** பர்சிலா எண்பது வயது முதியவர், தாவீதும் அவனது மனிதர்களும் வனாந்திரத்தில், தனது குமாரனிடம் தப்பி அலைந்து கொண்டிருந்த போது, உணவும், மற்ற அத்தியாவசிய காரியங்களும் அவர்களுக்குத் தேவைப் பட்டது. செல்வச் செருக்காயிருந்த பர்சிலா தாவீதுக்கும், அவனது மனிதர்களுக்கும் வேண்டியவற்றை அளித்துப் பராமரித்தான்; மக்னாயீமிலிருந்த காலம் வரைக்கும் உணவளித்து தாவீதின் மனிதர்களின் பாரத்தை அவர் பகிர்ந்து கொண்டான்.

சாதி, சமய, பாலின வயது வித்தியாசமின்றி – எவரும் நற்கிரியைகளைச் செய்யத் தடையில்லை என்பதை இச்சம்பவம் நமக்கு வெளிப்படுத்து கிறது; விருப்பமும், மனதுருக்கமுள்ள மனமுமே அதற்குத் தேவை. பர்சிலாவின் செய்கைகளுக்குப் பரிசளிக்கத் தனது ராஜ்யத்திற்கு தாவீது அவனை அழைத்த போது, அவன் அதை தாழ்மையாக மறுத்து விட்டான். பர்சிலாவின் அன்பும், கரிசனையும் சுயநலமற்றவை என்றும், அவன் தாவீதின் வேதனையையும், போராட்டத்தையும் பகிர்ந்து கொள்ளவே அவ்வாறு செய்தான் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

## இயேசு கிறிஸ்து!

சுயநலமற்ற அன்புக்கு இயேசு வானவரைவிட வேறு உதாரணம் எவருமில்லை. தமது பரலோக சிங்காசனத்தை விட்டிறங்கி, நமது பாவங்களுக்காக சிலுவையில் மரிக்குமளவுக்கு அவர் நம்மை நேசித்தார். **நம்மை மேலே உயர்த்த அவர் இறங்கி வந்தார். (சங்கீதம் 18: 35)** நாம் ஆசீர்வதிக்கப்படும்படி, அவர் தம்மைத்தாமே தாழ்த்தி நமக்காக சாபமானார். நமது தலையை உயர்த்தும்படி, அவர் நமது அவமானத்தைச் சுமந்தவர். அவருடைய பலியின் மூலம் நாம் பாவமன்னிப்பு, நித்திய ஜீவன் ஆகிய மாபெரும் ஈவுகளைப் பெற்றிருக்கிறோம். **நான் உன்னைக் கைவிடுவதுமில்லை, உன்னை விட்டு விலகுவதுமில்லை** என்று (எபிரெயர் 13: 5) அவர் வாக்குப் பண்ணியிருக்கிறாரே; மேலும் **"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன். அவன் என்னை நோக்கி கூப்பிடுவான், நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்"** (சங்கீதம் 91: 14–15) என்று அவர் கூறியுள்ளாரே!

ஆபத்துக்காலத்தில் நம்மோடு இருப்பதாக தேவன் உறுதியளித்துள்ளார். நமது பாரங்களை தன்னோடு பகிர்ந்து கொள்ள இயேசு நம்மை அழைக்கிறார்.

**"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார்** (மத்தேயு 11: 28–30).

நாம் அவரித்தில் வந்து நமது கவலைகளையும், வேதனைகளையும், தோல்விகளையும், பயங்களையும் ஒப்படைக்க வேண்டுமென்று அவர் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார். நீங்கள் அவரிடம் வந்து அவர் உங்களுடைய பாரங்களைச் சுமக்க அனுமதிப்பீர்களா?

இயேசுவானவர் நமது பாரங்களைச் சுமப்பதுபோலவே, நமக்காக ஜெபிக்க சபைக் குடும்பம் ஒன்று நமக்குண்டு. மேலும் நாமும் ஒருவரது வாழ்க்கையில் ஒரு 'யோனத்தானாக'க் காணப்பட வழி காண வேண்டும்.

## 1. மற்றவர்களுக்காக ஜெபித்தல்!

ஜெபம் ஓர் வல்லமையுள்ள ஆயுதம். நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கலாம். பாவத்தில் போராடும் நபரைக் குறை சொல்லுவதைவிட, அவருக்காக அவருடன் சேர்ந்து ஜெபிக்கலாமே? நீங்கள் வெறுக்கும் நபரைப் புறங்கூறாமல், அவருக்காக உண்மையாய் ஜெபிக்கத் துவங்குங்கள்.

## 2. கவனித்தல்!

தங்களது பிரச்சனைகளை மனதுருக்கத்துடன் செவிமடுத்து கேட்டு, தீர்வு சொல்ல ஒருவர் தேவை என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். அவர்களை நியாயந்தீர்க்காமல் கவனிக்க வேண்டும். அது உங்கள் குடும்பத்தாரோ, நண்பரோ அல்லது உங்களுக்கு வேதனை ஏற்படுத்தியவராகவோ இருக்கலாம். மக்களுக்குத் தேவையான நேரத்தில்

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....


நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

ECHO OF HIS CALL 1969–2019 REACHING NATIONS

வேளச்சேரி, சென்னை

போதனா மொழி : இந்தி

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

Diploma in Theology

உடனே அணுகவும் !

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.

தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.




"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :




தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in


## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## பென்சில் பாய் - புதிய தலைமுறையினருக்கு ஒரு பழைய சரித்திரம்!!

"பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்" (நீதிமொழிகள் 22:6).

ஒரு கிராம அரசினர் பள்ளியில் நான் 5ஆம் வகுப்பு முடித்ததும் என் பெற்றோர் உயர்நிலைப்பள்ளி ஒன்றில் என்னைச் சேர்த்தார்கள். அங்குதான் முதன்முதலாக ஆங்கில எழுத்துக்களைக் கற்றுத் தந்தனர். அங்கு நான் சென்ற முதல்நாளில், என் வகுப்பு ஆசிரியை, நாங்கள் அடுத்தநாள் பள்ளிக்கு வரும்பொழுது ஒரு பென்சிலும், நோட்டுப் புத்தகமும் கொண்டு வரும்படிச் சொன்னார்கள். நான் அன்று வீட்டிற்கு வந்தவுடனேயே, என் தகப்பனார் வெளியூர் சென்றிருந்ததால், என் தாயாரிடம் என் தேவையைக் கூறினேன். அவர்கள் எனக்கு வேண்டிய நோட்டுப்புத்தகங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால் அவர்களால் ஒரு பென்சில் வாங்க முடியவில்லை. வீட்டினருகிலுள்ள எங்கள் உறவினர்களிடம் தன்னுடைய இயலாமையைக் கூற மனதில்லாமல் அவர்கள் என்னிடத்தில் உண்மை நிலையைக் கூறி, இயேசப்பாவிடம் என் தேவையைக் கூறி ஜெபிக்க அறிவுறுத்தினார்கள்.



அவர்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அன்று இரவு நான் முழங்கால் படியிட்டு எனக்கு ஒரு பென்சில் வேண்டும் என்று ஜெபித்துவிட்டு தூங்கச் சென்றுவிட்டேன். அடுத்தநாள் காலை வரை தேவன் எனக்கு எந்த பென்சிலையும் தரவில்லை. எனவே நான் பள்ளிக்கு பென்சில் இல்லாமலேயே சென்றேன். பள்ளியில் மற்ற மாணவர்கள் அனைவரிடமும் பென்சில் இருந்ததால் அவர்கள் ஆசிரியைக் கூறியதையெல்லாம் எழுத முடிந்தது. எனக்கு மட்டும் அவ்வாறு செய்யமுடியவில்லை. அப்பொழுது ஆசிரியை நான் ஒன்றும் எழுதாமல் அமர்ந்திருந்ததைக் கவனித்து, என்னிடம் வினவினார்கள். அதற்கு நான் இயேசு கிறிஸ்துவிடம் ஜெபித்துள்ளதாகவும், பென்சில் எனக்காக இயேசுகிறிஸ்து அனுப்பியிருக்கிறார் என்றும் பதிலளித்தேன். ஆனால் அந்த ஆசிரியை கோபமடைந்து, என் தாயார் எனக்கு ஜெபிக்க அறிவுறுத்தியதை அறிந்து சற்று ஆத்திரமடைந்தார்கள். அடுத்தநாளில் நான் பென்சில் இல்லாமல் பள்ளிக்கு வரக்கூடாது என்றார்கள்.

மிகுந்த துக்கத்துடன், இச்செய்தியை என் தாயாரிடம் சுமந்து சென்றேன். அதைக் கேட்ட என் தாயார், 'பென்சில் ஜெபத்தை' இயேசப்பா கேட்டதற்காக அவர்களுக்கு நன்றி சொல்ல கற்றுத் தந்தார்கள். அன்று நடுஇரவு வரை கர்த்தருக்கு நன்றி சொல்லிக் கொண்டேயிருந்தேன். ஆனால் அதன்பின் என்னால் தூங்கவே முடியவில்லை. அடுத்த நாள் பென்சில் இல்லாமல் பள்ளிக்குச் சென்றால் அங்கு எனக்குக் கிடைக்கவிருக்கும் தண்டனையை எண்ணிக் கலங்கினேன்.

அன்றைய இரவுநேரத்தில் யாரோ கதவைத் தட்டினார்கள். வீட்டில் ஆண்கள் இல்லாததை அறிந்து யாரோ திருட வந்திருக்கலாம் என்று என் தாயார் நினைத்து என்னை அமைதியாகத் தூங்கச் சொன்னார்கள்.

அந்த நடுஇரவில், என் தாயாரின் பெயரைச் சொல்லி கதவைத் தட்டினவர் கூப்பிட்டார். அது வேறுயாருமில்லை, எனது மாமாதான்! 70 கி.மீ. அப்பாலுள்ள பாளையங்கோட்டை என்ற ஊரில் காவல்துறை அதிகாரியாய் அவர் பணியாற்றி வந்தார். அவர் பெயர் திரு.செல்வமணி என்பதாகும். நாங்கள் சந்தோஷமாய்க் கதவைத் திறந்தோம். அவர் எப்போதும் போல எனக்கு பிஸ்கட், சாக்லேட் மற்றும் துணிமணி என்று பல பொருட்களை வாங்கி வந்திருந்தார். அவர் கொண்டு வந்த ஒரு பையை நான் திறந்தபோது அதற்குள் ஒரு பெட்டி இருந்தது. அதை ஆவலோடு நான் திறந்தபோது விலைகூடின அநேக நடராஜ் பென்சில்கள் அதற்குள் இருந்தன (நடராஜ் பென்சில்கள் அந்நாட்களில் மிகவும் விலையேறப்பட்டனவாய் இருந்தன). அந்த பெட்டிக்குள் 24 பென்சில்கள் இருந்தன.

அன்று இரவு நான் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் என் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என் ஜெபத்தைக் கேட்டது மட்டுமன்றி, அதற்கு பதிலும் அளித்துவிட்டார். என் சந்தோஷம் எனக்குள் பொங்கி வழிந்ததினால் என்னால் அன்று இரவு முழுவதும் என்னால் தூங்கவே முடியவில்லை.

அடுத்தநாள் காலையில், மற்ற மாணவர்கள் எல்லாம் ஒரு பென்சில் மட்டும் கொண்டு வந்திருக்க, நான் மட்டும் 24 பென்சில்கள் அடங்கிய பெட்டியையே பள்ளிக்குக் கொண்டு சென்றேன். எனது ஆசிரியை ஆச்சரியத்துடனும், வெட்கத்துடனும் அதைக் கண்டு என்னிடத்தில் நடந்ததை விசாரித்தார்கள். "நேற்று வந்து கொண்டிருந்த பென்சில் இன்று என் கையில் வந்து சேர்ந்துவிட்டது" என்று வெகுளித்தனமாய் நான் கூறினேன். என்னைத் தட்டிக் கொடுத்து, சந்தோஷத்துடன் அந்த ஆசிரியை எல்லோரையும் பார்த்து, "ஜீவனுள்ள தேவன் ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் இயேசு கிறிஸ்து", என்று அறிவித்தார்கள்!

எனதருமை வாசகரே, இச்சம்பவம் எனது சிறு வயதில் நடந்திருந்தாலும், அது இன்னும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. எனக்கு பென்சில்களைக் கொடுத்த தேவன் இன்றும் உயிரோடிருக்கிறார். "அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபிரெயர்13:8). எனது அறையில் ஒரு சிறிய பாய் (Mat) எப்போதும் தயார்நிலையில் விரித்து வைத்திருக்கிறேன். அதை

'பென்சில் பாய்' என்று அழைக்கிறேன். ஒவ்வொரு நாளும் அந்த 'பென்சில் பாயில்' அதிகாலை வேளையில் அமர்ந்து அல்லது முழங்காலில் நின்று ஜெபிக்கிறேன். எனக்கு அதிகவேலைப்பளு இருப்பினும் ஒருநாளில் 3 வேளை அதில் அமர்ந்து ஜெபித்து வருகிறேன். என் தேவைகள் அனைத்தையும் அதே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடம் சொல்லி வருகிறேன். இதுவரை இந்த இயேசுகிறிஸ்துவிடமிருந்து சிறிய ஊசியிலிருந்து, அநேக வாகனங்கள், மிகப்பெரிய கட்டடங்கள் ஆகியவற்றை அந்த 'பென்சில் பாயில்' அமர்ந்துதான் ஜெபித்துப் பெற்றிருக்கிறேன். இதிலிருந்து நான் கற்றுக் கொண்டது என்னவென்றால்: **பரிசுத்த வேதாகமத்தைச் சுமக்கிற கைகளும், ஜெபிக்க முழங்காற்படியிடும் கால்களும் ஒருபோதும் தோல்வி அடைவதில்லை.**

எனவே, எனது கடந்த 55 ஆண்டு ஊழியப் பாதையில் பணம் சேகரிக்கும் திட்டங்களை நான் மேற்கொண்டது இல்லை. சேகரிக்க எவருடைய வாசற்படியில் சென்று நிற்கவோ, நான் செய்யும் பல்வேறுவித ஊழியங்களுக்காக எந்த நபரிடமும் போய் கெஞ்சவோ முற்பட்டதில்லை. எனது 'பென்சில் பாயில்' அமர்ந்தும், முழங்காலில் நின்றும் என்னை அழைத்த ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவிடம் மாத்திரமே கேட்டு என் எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்து வருகிறேன். நான் சென்னையில் இருந்து ஜெபிக்கும்போது வெகு தூரத்தில் இருக்கிற தேவமக்களிடம் அவர் பேசி, அவ்வப்போது எல்லாத்தேவைகளையும் சற்றும் தவறாமல் சந்தித்து வருகிறார். சரீர சுகம் அளிக்கிறார். என்னிடம் ஓர் சினேகிதனைப் போல் பேசி அரவணைக்கிறார். அவரே எனக்கு இன்றும் போதுமானவராய் இருக்கிறார். கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார். நான் தாழ்ச்சிடையேன் (சங்கீதம் 23:1).

**“என்னைப் பெலப்படுத்துகிற இயேசுகிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு”** (பிலிப்பியர்4:13).

* * * * * * *

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

அவர்களுக்கு நன்கு செவிமடுத்துக் கேளுங்கள்.

## 3. தேவைகளைச் சந்தித்தல்!

விசுவாசம் கிரியைகளில் வெளிப்பட வேண்டுமென்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. ஜெபிப்பதும், செவிமடுத்துக் கேட்பதும் மட்டும் போதாது; அவர்களது தேவையைப் பூர்த்தி செய்ய நம்மால் இயன்றவற்றைச் செய்ய வேண்டும். இது எப்பொழுதும் பணஉதவியல்ல நமது திறமை, அறிவு, அனுபவம், ஆதரவு, வழிநடத்துதல் ஆகியவற்றாலும் நாம் உதவலாம்.

## 4. தொழில் நுட்பம்!

தொழில் நுட்பத்தைப் பயனுள்ள நோக்கத்திற்காகப் பயன்படுத்தவும். கடினப்பாதையினூடே செல்லுபவர்களுக்கு நம்பிக்கையளிக்கும் குறுஞ்செய்தி, அல்லது குரல் செய்தியனுப்பலாம். ஒரு ஜெபம் அல்லது உற்சாகமூட்டும் செய்தியை அனுப்பலாம்; நீங்கள் நேரடியாக அந்த நபருடன் இருக்க இயலாவிட்டாலும் உங்களுடைய வார்த்தைகள் ஒரு வலிமை யான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவை. போராட்டமான சூழ்நிலையில் உள்ளவர் களுக்கு ஒரு வேத வசனத்தையோ அல்லது ஒரு ஆறுதலான குறுஞ்செய்தியையோ அனுப்புங்கள்.

## 5. சபையாரைக் கவனித்தல்!

உங்கள் சபையாரை விசாரிப்பதை ஒரு பழக்கமாகக் கொண்டிருங்கள். யாராவது ஒருவர் சபையில் வராமலிருந்தால், தொலை பேசியில் விசாரித்து, அவர்களுக்காக ஜெபியுங்கள்; உதவி தேவைப்படுமானால் செய்யுங்கள். மற்ற சகோதர சகோதரிகளும் சபைக்குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்பதை உறுதி செய்யுங்கள்.

## 6. சேவை செய்தல்!

இயேசுவைப்போல், உங்களால் முடிந்த எவ்வழியிலாவது மற்றவர்களுக்கு சேவை செய்ய ஆயத்தமாயிருங்கள். சேவை செய்ய சந்தர்ப்பங்கள் ஏராளமாயிருந்தாலும், ஒருவர் பாரத்தை ஒருவர் பகிர்ந்து கொண்டு, தேவனுடைய பிள்ளைகளாக நமது அழைப்புக்கேற்ப நடந்துகொள்ளுவோமாக!

* * * * * * *


## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Account Name** : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST
**Account Number** : 1023 2923 805
**Bank Name** : STATE BANK OF INDIA
**Branch** : TRIPLICANE, CHENNAI - 600 005
**IFSC Code** : SBIN 0000249
**SWIFT Code** : SBI NIN BB 455



## அலுவலகம்

நமது ஊழிய அலுவலகத்திற்கு கம்யூட்டர் (DTP) பணியாளர்கள் / தட்டச்சர்கள் தேவை. தொடர்புக்கு: 98412 71858


## அன்பான வாசகர்களின் கவனத்திற்கு . . .

### போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதை

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் சுயசரிதையை புத்தக வடிவில் முடிப்பதற்கான நிறைவுக் கட்டத்தில் இருக்கிறோம். நமது போதகரின் ஊழியத்தின் மூலம் நீங்கள் பெற்ற நன்மைகளை 10 வரிகளில் சாட்சியாக எழுதி அனுப்பவும். கூடுதலாக தங்கள் புகைப்படத்தை அனுப்பினால் அதனை சுயசரிதை புத்தகத்தில் சேர்த்து வெளியிட உதவியாக இருக்கும்.

– ஆசிரியர்

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

### *1. Bank : State Bank of India*

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

### *2. Bank : ICICI Bank*

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

### *3. Bank : State Bank of India*

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❀ வருட சந்தா ரூ. 100/– ❀ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**

**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

## YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th OCTOBER 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

*JESUS LOVES YOU!*

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**